பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மார்கழி 07 | 22 - 12 - 94 | வியாழக்கிழமை | ஓசை 307

## இலங்கையில் 30 சதவீத குழந்தைகள் காய்ச்சல்நோயால்பீடிக்கப்படுகின்றனர்

இலங்கையில் ஐந்து வயதிற்கு குறைந்த பிள்ளைகளிடையே காய்ச்சல் நோய் பரவலாக காணப்படுகின்றது. ஐந்து வயதிற்கு குறைந்த பிள்ளைகளில் 30 சதவீதத்தினர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்ததாக திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு 1993 இல் பிள்ளைகளின் போஷாக்கு மற்றும் சுகாதார நிலை குறித்த தேசிய ஆய்வில் குறிப்பிட்டுள்ளது. பிள்ளைகளின் நோய்வாய்ப்படும் தன்மையில் நகர-கிராம வேறுபாடொன்றும் நிலவி வரவில்லை என்றும் நோயுற்ற பிள்ளைகளில் சுமார் 80 சதவீதத்தினர் வெளிநோயாளர்களாக சிகிச்சை பெற்றுள்ளனர். 7 சதவீதத்தினர் உள்நோயாளர்களாகவும் சிகிச்சை பெற்றுள்ளனர் என இவ் ஆய்வு கூறுகின்றது. இதில் 2 சதவீதத்தினர் சிகிச்சை எதனையும் பெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# வடபகுதி இராணுவ தலைமையில் பாரிய மாற்றங்கள் செய்யமுடிவு

## யாழ்., வன்னிக்குப் புதிய தளபதிகள்

(கொழும்பு)

வடமாகாண இராணுவத் தலைமைப் பீடத்தில் பாரிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும், இதன் முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்ப்பாணம், மற்றும் வன்னிப் பகுதிக்கான இராணுவத் தளபதிகள் மாற்றம் செய்யப்படவுள்ளதாகவும், தெரிய வருகின்றது. இதைத் தொடர்ந்து, கிழக்கிலும் மாற்றங்கள் படிப்படியாகச் செய்யப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இம்மாற்றங்கள் குறித்து இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ள ''தினமின'' என்னும் சிங்கள நாளிதழ், வடமாகாண இராணுவ தலைமையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் இதற்கு முன்னோடியாக பல மாற்றங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதன் முதற் கட்டமாக யாழ். மாவட்ட நடவடிக்கைத் தளபதியாக மேஜர் ஜெனரல் லால் வீரசூரிய நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதேவேளை பூநகரி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளின் நடவடிக்கைப் பொறுப்பதிகாரியாக மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை மேலும் பல சிரேஷ்ட உயர் அதிகாரிகளின் மாற்றங்கள் விரைவில் ஏற்பட இருப்பதாக சுட்டிக்காட்டிய அப்பத்திரிகை படிப்படியாக கிழக்கு மாகாணத்திற்கு இவை போன்ற மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை தற்போது யாழ் மாவட்ட நடவடிக்

[6ஆம் பக்கம் பார்க்க]

## தரமற்ற குளிர்களிகள் யாழ். நகரில் கண்டுபிடிப்பு

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அண்மையில் யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரபல்யமான குளிர்களி உற்பத்தியாளர்களின் குளிர்களி மாதிரிகள் திடீர் பரிசோதனையின் போது எடுக்கப்பட்டு உரிய பகுப்பாய்வுக் குட்படுத்தப்பட்டது.

எடுக்கப்பட்டஎல்லா மாதிரிகளிலும் சில பக்றீரியங்கள் கலந்திருக்கக் காணப்பட்டன. இவை மனித ஆரோக்கியத்திற்கு ஒவ்வாதவையாகும். மழைகாலம் காரணமாக இக்கிருமிகள் இவற்றில் கலந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

எனவே பாவனையாளர்களும் உற்பத்தியாளர்களும் இது குறித்து அவதானமாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அத்துடன் உற்பத்தியாளர்கள் உரிய சுகாதார முறைகளைப்பேணி சரியான உள்ளீடுகளை உபயோகித்து தரத்தைக் கண்டிப்பாகப் பேணும்படி வேண்டப்படுகின்றனர்.

## வடக்கு - கிழக்கில் மேலும் தேசிய பாடசாலைகள்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேலும் பல தேசிய பாடசாலைகளை அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்விஅமைச்சர் ரிச்சர்ட் பத்திரண தெரிவித்துள்ளார்.

இதன் முதற் கட்டமாக வவுனியா மாவட்டத்தில் நான்குபாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப் பட உள்ளதாகவும் இவற்றில் இரண்டு தமிழ்ப் பாடசாலைகளும், ஒரு முஸ்லிம், ஒரு சிங்கள பாடசாலைகளும்தரமுயர்த்தப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## காரைநகரில் புலிகள் தாக்கு; சிப்பாய் ஒருவர் பலி

(கொழும்பு)

காரைநகர் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் பலியானார்.

நேற்று முன்தினம் காலை காரைநகர் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் முகாம் பகுதியிலேயே விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரியவருகின்றது.

இத் தாக்குதலினால் ஏற்பட்ட மேலதிக சேதவிபரங்கள்எதுவும் தெரியவரவில்லை

## பயிலுநர் ஆசிரியர் அனைவருக்கும் ஜனவரி முதல் நிரந்தரநியமனம்

### கிராம அதிகாரிகள் மத்திய அரசின் கீழ் வருவர்

(கொழும்பு)

பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரும் ஜனவரி முதல் நிரந்தரமாக்கப்படவுள்ளனர் என வெகுஜனத் தொடர்பு சுற்றுலா விமானத் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்து அறிவிப்பதற் ... ச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

மேலும் இந்த ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்காக 64கோடி 20லட்சம் ரூபா விற்கான குறை நிரப்பு மதிப்பீட்டிற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

... ச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தார். கச்சேரி, மாகாண சபைகளின் கீழ் இயங்கும் கிராம அதிகாரிகளை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நியாயமான முறையில் அவர்களது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை

## புலிகளின் தாக்குதலில் 3 பொலிசார் படுகாயம்

### ஒருவரைக் காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சத்துருக்கொண்டான் அருகேயுள்ள மகிழடி கிராமத்தில்சிறிலங்கா பொலிசார் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலின் போது மூன்று பொலிசார் படுகாயமடைந்ததாகவும் ஒரு பொலிசாரைக்காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்குள்ளான செனவிரத்ன, அஜித், நவரத்ன ஆகிய மூன்று பொலிசாரும் உடனடியாக மட்டுநகர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்

(6ஆம் பக்கம் பார்க்க)

நாயக்கா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்து அறிவிப்பதற்காக நேற்று கொழும்பில் நடாத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் வைத்தே அமைவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாகாணசபைகள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட இந்த ஆலோசனையை அமை... மான முறையில் அவர்கள் து... சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# சந்திரிகாவின் ஆலோசகர் குறித்து சிரேஷ்ட உ..றுப்பினர்கள் அதிருப்தி

(கொழும்பு)

நாட்டில் நிலவும் துன்பங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியை குற்றம்சாட்டிய காலம் போய் இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணியை குற்றம் சாட்டும் நிலை வந்து விட்டது. இவ்வாறு சென்னையிலிருந்து வெளியிடப்படும் இந்து பத்திரிகை பொதுஜன ஐக்கிய முன்னணியின் நான்கு மாத ஆட்சி பற்றி கருத்துக் கூறியுள்ளது.

அது மேலும் குறிப்பிடுகையில், புதிய சோசலிஸ்டுகள், மற்றும் அரசியல்வாதிகள் அல்லாத ஆலோசகர்கள், வேறு பல புதிய முகங்கள் என்பன சிறிலங்கா ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்களாகியுள்ளனர். இப் புதியவர்களின் ஆலோசனைகளில் ஜனாதிபதி தொடர்ந்தும் தங்கியிருந்தால் பொதுஜன ஐக்கிய முன்னணி மக்களிடமிருந்து அந்நியப்பட்டு விடும் என சிரேஷ்ட உறுப்பினர்கள் கவலை கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளது.

# புலிகளுடன் மோதுவதற்கு படையினருக்கு வசதிகள் வழங்குக

## ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

'புலிகளுடன் மோதுவதற்கு படையினருக்கு சகல வசதிகளையும், அளிக்கவேண்டும். படையினரின் தேவைகள் யாவும் நிறைவேற்றப்படவேண்டும்' இவ்வாறு ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஹெல உறுமய பிரமுகருமான திலக் கருணாரத்னா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதுகாப்பு வரி அறவீடு திருத்த சட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அவசியம் தீர்வு காணவேண்டும். வட-கிழக்கு மக்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவும் வேண்டும் எனினும் வடக்கு - கிழக்கு பகுதியில் புலிகள் தவிர வேறு எவரும் அரசியல் நடத்த முடியாது இருக்கிறது. எனவே புலிகளை எவ்வாறு வெற்றி கொள்வது என்பதே பிரச்சினை எனவும் குறிப்பிட்டார்.

# 14 கோரிக்..கைகளை முன்வைத்து அரசாங்க தாதியர் போராட்டம்

## வேலைநிறுத்தம் செய்வோம் என எச்சரிக்கை

முக்கிய நான்கு கோரிக்கைகள் உட்பட 14 கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்க தாதிகள் நேற்றுமுதல் சட்டப்படி வேலையை மேற்கொண்டனர்.

தமது கோரிக்கைகள் முக்கியமானவை என்றும் எனவே அதனை காலதாமதம் இன்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தவறின் முழுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் தாம் இறங்கப்போவதாகவும் அரசாங்க தேசிய தாதிகள் சங்கத் தலைவர் வண. முரத்தட்டுவே இமியோ தெரிவித்துள்ளார்.

# தெளிவானதொரு நிலையில் பேச்சுவார்த்தை தொடரும்

## -சந்திரிகா குமாரதுங்கா

(கொழும்பு)

தெளிவான ஒரு நிலையில் எதிர்காலத்தில் நாம் சமாதானப் பேச்சுக்களைக் கொண்டு செல்வோம் என சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ரூபவாஹினிக்குநேற்று இரவு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். இந்த அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை எதிர்காலத்தில் முன்னெடுத்துச்செல்லுமா என்று கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று இரவு 7 மணிமுதல் சுமார் 55 நிமிடங்கள் இடம்பெற்ற இப் பேட்டி நிகழ்ச்சியில் சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் லூசியன் ராஜகருணநாயக்க ஜனாதிபதி சந்திரிகாவை பேட்டி கண்டார்.

கேள்வி: உங்கள் அரசாங்கம் ஆட்சியில் அமரும் போது கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்று இந்த நாட்டில் மீண்டும் சமாதானம் ஏற்படுத்தப்படும் என்பதாகும். எனக்குத் தெரிந்த அளவில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இது தொடர்பாக சென்றமாதங்களில் மூன்றுமுறை அதிகாரம் வழங்கப்பட்டது. தென்மாகாண சபை தேர்தல், பொதுத்தேர்தல், ஜனாதிபதி தேர்தல் என்பனவே அவையாகும்.

ஆனால் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது இவை சில காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டது. தற்போது எமக்கு கிடைத்த தகவலின்படி வடபகுதி மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

[6ஆம் பக்கம் பார்க்க]

# நத்தார் பண்டிகையின் பின்னர் பேச்சுவார்த்தை நடைபெறலாம்

## -தர்மசிறி சேனநாயக்கா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு நத்தார் பண்டிகைக்குப்பின் கிடைக்கும் என தகவல்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்து அறிவிப்பதற்காக கொழும்பில் நேற்று மாலை நடாத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் வைத்து மேற்கண்ட தகவலை வெளியிட்ட அமைச்சர், அமைதிப் பேச்சுக்குறித்து அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. இன்னமும் இக் கடிதத்திற்குரிய பதில் எதுவும் புலிகளிடமிருந்து அரசிற்குக் கிடைக்கவில்லை என்றார்

மேலும் சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நிச்சயமற்ற நிலையே காணப்படுவதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

# அமர்வுகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பாக ஆராய என நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அமர்வுகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# இன, மொழி பற்றை ஏற்படுத்திய முதுபெரும் தலைவர் கி. ஆ. பெ.

## அரசியற்றுறையினர் இரங்கல் செய்தி

அடிமைத்தளையிற் கட்டுண்டு மூடநம்பிக்கையிற் திளைத்திருந்த தமிழ்மக்களிடையே தந்தை பெரியாரோடிணைந்து தன்மதிப்பு (சுயமரியாதை) இயக்கத்தை நடத்தி மொழி, இன நாட்டுப்பற்றையும் அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்காகக் கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக அயராது உழைத்து வந்த முதுபெரும் தலைவர் கி. ஆ. பெ விசுவநாதம் அவர்களின் மறைவானது உலகத் தமிழினத்துக்கே பேரிழப்பாகும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை கி ஆ பெ விசுவநாதம் மறைவையொட்டி விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளது.

மேலும் அச் செய்தியில் கடந்த 11-11.94அன்று 96 வது அகவை கண்ட முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. அவர்கள் தமிழினத்துக்குக் கிடைத்த தன்னிகரில்லாப் பெரியார், பொது வாழ்க்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## C S A

**கணனி வகுப்புக்கள்**

7 மாத Data Proc ssing & BASIC programming. ஆரம்பம் 28-12-94 காலை 8.30 மணி. பல்கலைக்கழகம் புக இருப்பவர்களுக்கு ஏற்றது. ComputerScienceAcademy. Navalady Lane, Thirunelvely. (சி-10923)

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடியைச்சேர்ந்தபசுபதிப்பிள்ளை அரசரட்ணம் என்பவரது ஓய்வூதிய அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப் பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும். [இ]

## இலவச மூக்கு கண்ணாடி

(தென்மராட்சி)

யா/கைதடி முத்துக் குமாரசாமி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 14 மாணவர்களுக்கு றெட்பான மூலம் அண்மையில் இலவச மூக்கு கண்ணாடிகள் வழங் கப் பட்டன. (86)

## முதலுதவிச் சிறு சிகிச்சை

கடந்த மாதம் முல்லை மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவன முதலுதவிச்சிற சிகிச்சை திட்டம் மூலம் 84கால்நடைவளர்ப்போர் நன்மை அடைந்துள்ளனர்.

நெடுங்கேணி, குமுழமுனை, முல்லை சிறுசிகிச்சைநிலையங்கள் மூலம் இச் சிகிச்சை வசதிகள் கிடைத்துள்ளன.

கால்நடை வளர்ப்போருக்குகால்நடைகளுக்கு சிகிச்சை செய்ய முடியாத இன்றைய நெருக்கடியான காலத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் இச் சிகிச்சைகள வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்,

## அபிவிருத்தி பணி

(யாழ்ப்பாணம்)

யாழ்- வண்- முஸ்லிம் பாடசாலையில் இயங்கிவரும் புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தில் கல்வித்திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள நிதியைக் கொண்டு சில அபிவிருத்திப் பணிகள் மேற்

தென்மராட்சிப் பகுதியில்

# ராணுவத்தின்தாக்குதலுக்கு 38 பொதுமக்கள் பலி

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதியில் இராணுவ நடவடிக்கையினால் இவ்வாண்டு 38பேர் மரணமாகியுள்ளனர். இதை தவிர விபத்து மரணத்தினால் 13பேரும் கற்கொலை மரணத்தினால் 23 பேரும் மாரடைப்பு நோயினால் 15 பேரும் மரணமாகியுள்ளதாக சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

எனினும் கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு இராணுவ நடவடிக்கையினால் இறந்தோர் தொகை குறைந்தும் தற்கொலை, மாரடைப்பு விபத்து போன்ற மரணங்கள் அதிகரித்தும் உள்ளன.

இதில் குறிப்பாக மாரடைப்பினால் பாதிக்கப்பட்டோரில் 75 சதவீதமானோர் விறகு வியாபாரிகளே எனவும் அறியப்படுகிறது. (86)

## அச்சுவேலி வடக்கு குஞ்சுமந்திரிகைபுல மட தர்ம ஆதனங்கள்

கரணவாய் தெற்கு காலஞ்சென்ற இராச பண்டித முதலியார் பூதர் அவர்களால் குஞ்சுமந்திரிகைப்புலம் என்ற ஆதனத்தில் இதனுடன் சேர்த்து ஐந்து ஆதனங்களுக்கும் அமைக்கப்பட்ட தர்மசாதனத்திற்கு ஏற்கனவே தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்ட அச்சுவேலி ஊரியானைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவஞானம் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, கரணவாய் தெற்கு கப்பூதைச் சேர்ந்த ஆறுமுகம் சாம்பசிவம் ஆகிய நான் சட்டபூர்வமான தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டுள்ளேன். இந்த ஐந்து ஆதனங்கள் தொடர்பான பரிபாலனத்திற்கும் குறிப்பிட்ட சின்னத்தம்பி சிவஞானத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் இவை சம்பந்தமாக அவருடன் செய்யப்படும் எவ்வித உடன்பாடுகளுக்கும் இதன் தர்மகர்த்தாவாகிய நானோ அல்லது இத்தர்மச் சொத்துக்களோ பொறுப்பாக்கப்படமாட்டா தென்பதையும் இத்தால் யாவருக்கும் அறியத்தருகின்றேன்.

ஆறுமுகம் சாம்பசிவம்
தர்மகர்த்தா.

(10464)

## தமிழீழ காவல்துறையினருக்கு பாராட்டுக்கள்

26-10 94 அன்று இரவு எனது வீட்டில் இருந்த C50 சுப்பர்கப் மோட்டார்சைக்கிள்(த1-0725) திருடப்பட்டதைத்தொடர்ந்து27-10-94-ல்யாழ்ப்பாணம்4-ம் குறுச்குத்தெருவில் உள்ள காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்தேன். அச்சமயம் அவர்கள் இன்முகம் காட்டி வரவேற்று எனது முறைப்பாட்டினை ஏற்றுக் கொண்டார்கள் இது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். பின் 29-11-94-ல் மேற்படி எனது மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களாகக் கழற்றப்பட்ட நிலையில் பாண்டியன் தாழ்வுப்பகுதியிலிருந்து மீட்டுத் தந்தனர். உதிரிப்பாகங்கள் அனைத்தும் குறையாத நிலையில் எனது மோட்டார் சைக்கிளை மீட்டுத்தந்த தமிழீழ காவல்துறையினரின் அயராத சேவையை மனதார பாராட்டுகிறேன் அத்துடன் கிளாலி துறைமுகங்களுக்கான பொறுப்பாளர்களுக்கும் எனது மேற்படி மோட்டார் சைக்கிள் மீளக்கிடைத்துவிட்டதென்பதை அறியத்தருகின்றேன்.

547, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். சு. கனகரத்தினம்

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்திலுள்ள பனை தென்னை மர தீராந்தி, சிலாகைவகை விற்பனையாளர்களை ஒருங்கிணைக்கும் முகமாக தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனத்தில் பதிவுசெய்தவர்கள்மட்டும்எதிர்காலத்தில்மரவிற்பனையில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்களென்பதால், சகல பனை தென்னை மரக்காலை உரிமையாளர்களும், பனை தென்னை மர விற்பனையாளர்களும் 15-01-1995 க்கு முன் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் தம்மை தவறாது பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம்**

230 இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம். (சி-10972)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி சித்திரவதனி சின்னத்துரை
(வெளிவாரி கலைப்பட்டதாரி மாணவி)

மலர்வு: 23.11.1966 உதிர்வு: 22.12.1989

## நினைவு கூருகின்றோம்...

### 22.12.1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்காப்படையினரின் முற்றுகையின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **அபுஸ்கோன் இறைசன்** (அக்கரைப்பற்று-அம்பாறை)

★ **மூர்த்தி** (கணபதிப்பிள்ளை மூர்த்தி--அட்டைப் பள்ளம்-அம்பாறை)

1986-ம் ஆண்டு மட்டு-வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஈசன்** (சாமித்தம்பி இரத்தினசிங்கம்- வந்தாறுமூலை -மட்டு

இதே இடத்தில் சிறிலங்கா அதிரடிப்படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

**யோகன்-சரத்** (இராசையா யோகராசா - வந்தாறு மூலை-மட்டு)

**மில்டன்** (சிங்கராசா திலகன்-வந்தாறுமூலை-மட்டு)

1987-ம்ஆண்டு கோண்டாவில்-காரைக்காலில் இந்தியப்படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.குமார்** (செல்வநாயகம்சிவகுமார்(சிவா)-இலங்கேஸ்வரன் வீதி-கோண்டாவில்)

1988-ம் ஆண்டு பாலைச்சோலைப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய;

**லெப்.தவம்** (ஞானமுத்து தவராசா-களுவங்கேணி-மட்டு)

1990-ம் ஆண்டு கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அலன்** (குருசாமி ஜீவராசா-விசுவமடு-முல்லைத்தீவு)

**ரமா** (லோகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை - புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**கப்டன் ஆஷா** (பத்மாவதி(கலா)நடராசா-நாயன்மார்கட்டு-யாழ்)

**கப்டன் அஜீத்தா** (சுகுணராணி கந்தையா- சங்கத்தானை, சாவகச்சேரி-யாழ்)

**சாம்சன்** (செல்வநாயகம் செல்வச்சந்திரன் ஏழாலை வடக்கு-யாழ்)

**ஸ்ராலின்** (துரைரட்ணம்பகீரதன்-170/2, கண்டிவீதி, அரியாலை-யாழ்)

**ரதிகலா** (சுகந்தினி கனகரட்ணம்-குடத்தனை வடக்கு-வடமராட்சி கிழக்கு)

1991-ம் ஆண்டு அச்சுவேலி-ஆவரங்கால் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**சபேசன்** (நவரத்தினம் உதயகுமார் - குமுழமுனை ம்ணலாறு)

**ஆனந்தன்** [விவேகானந்தன்விக்கினதாஸ்-நவிண்டில்-நெல்லியடி-யாழ்]

1992-ம் ஆண்டு மட்டு-திருக்கோயில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப்.விஜயநாதன்** [சிவலிங்கம் ஜெயராசா--பொத்துவில்-அப்பாறை]

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

உள்ள 'தூண்கள் மட்டும் கொண்ட' ஒரு கட்டடம் கிடுகினால் வேயப்பட்டு கூரையிடப்படும் என்றும், புதிய கல்வி ஆண்டில் ஆரம்ப நிலை வகுப்புகள் இக்கட்டடத்தில் இயங்க வைக்கப்படும் என்றும் வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

## மதிப்பீட்டை பரிசீலிக்கலாம்

அவசரகால புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான யாழ்மாவட்டத்துக்கான புனரமைப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பிரதேச செயலர் ரீதியாக தயாரிக்கப்பட்டு, பிரதேச செயலர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அனர்த்தங்களினால் பல்வேறுபட்ட பாதிப்புக்களை அடைந்துள்ள பல குடும்பங்கள், கால்நடைச் சொந்தக்காரர்கள் விவசாய நிலங்களுக்கு உரிமையுடையவர்கள், பயிர்செய்தவர்கள், பலவிதமான கடைகள், போக்குவரத்து சேவை வாகனங்களின் சொந்தக்காரர்கள், தொழில் நிலையங்களின் உரிமையாளர்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் சரியான முறையில் ஆவணப்படுத்தப்பட்டு, இவ் உத்தேசத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கான சந்தர்ப்பம் சகல பாதிக்கப்பட்டவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறானவர்கள் தமது பகுதி கிராமசேவை உத்தியோகத்தரிடம் தொடர்பு கொண்டு தங்களது அழிவு மதிப்பீடுகள் சரியாகப்பதியப்பட்டுள்ளதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும் என யாழ் செயலக புனர் வாழ்வு பிரிவு அறிவித்துள்ளது.


நத்தார் நன்னாளிலே

திடீர் விருந்தினருக்கு
விருந்தளிக்க தினமும்

**ஜோ. எகட்டனின்**

**ஜெசித்தாரா தரும்**

**நத்தார் வெகுமதி நாவிற்கு சுவையும்**

நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு பெறுமதி மிக்க சுகாதாரமான பண்டங்களை, நத்தார் வெகுமதியாக தினமும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளவும். அத்துடன் எமது விருந்தகத்தில் ஒன்று கூடி உண்ணலாம், **விசேஷ லம்பாரிஸ் புரியாணி**, கோழி புரியாணி (நெய்க் கலவை), ஆட்டிறைச்சி புரியாணி (நெய்க் கலவை), **Sea Food Mixed Grill** புரியாணி, பிறைட் றைஸ் (எல்லா இறைச்சி வகைகளுடன்), நூடில்ஸ் இன் **Soya Souce**

**Rice & Curry With Special Meat**

வீட்டிற்கு வெளியிலே ஒரு மனை
அது ஜெசித்தாரா தரும் மனை

தினமும் காலை 10. 00 மணி முதல்
இரவு 7. 00 மணி வரை திறந்திருக்கும்.

24, 25, 26-ம் திகதிகளில்
இரவு 10. 00 மணி வரை திறந்திருக்கும்

**ஜோ. எகட்டனின்**

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

புது யுகத்தில் புது உலகம்
ஜெசித்தாரா
எமக்கு வேறு கிளைகள் இல்லை.

(சி-10975)


ஐந்தாண்டு சென்றதம்மா எம்மை விட்டு நீ பிரிந்து
தீராத நோயென்று தினப் பொழுதில் நினைத்தோமா
அன்பைச் சொரிந்து அணைத்திட்ட அண்ணாவே,
என்னையும் அழைத்திடண்ணா என்றெல்லோ தரிசித்தீர்
இன்றம்மா உன் நிலையில் இங்கெல்லோநாங்களெல்லாம்
நித்தமும் உன் நினைவால் உள்ளங்கள் பல இங்கு
ஆண்டாண்டு சென்றாலும் அழியாது உன் நினைவு

''விஷ்ணு மகால்''
கண்டி வீதி,
பளை.

**சேமன் சின்னத்துரை**
**குடும்பத்தினர்.**

(10468)

இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10963)

## 4-ம் ஆண்டு நினைவோடு...



பிறப்பு
28-3-1972

வீரச்சாவு
22-12-1990

**வீரவேங்கை ஸ்ராலின்**
**(துரைரட்ணம் பகீரதன்)**

அருமைமகனே பகீர்!
நீ மறைந்து இன்றோடு நான்கு ஆண்டுகள்
உன்னை மறக்க முடியாத நினைவோடு
மலரும் தமிழீழத்தில் உனை காணுவோம்

என்றும் தவிப்போடு வாழும்:
**குடும்பத்தினர்**

170/2 கண்டி வீதி,
அரியாலை.

(10430)

## 4-ம் ஆண்டு நினைவலைகள்



**கப்டன் ஆஷா**

**(பத்மாவதி/கலா நடராசா)**

**பிறப்பு 06-04-1968** **வீரச்சாவு 22-12-1990**

ஐந்துடன் பிறந்த ஐந்தாவது செல்வமே
அழியாத நினைவலையின் அன்பு செல்வமே
ஒடுக்கப்படும் மக்களையும், அழிக்கப்படும்
மண்ணையும்
மீட்டெடுக்கப் புறப்பட்ட எங்களது கலாக்குட்டியே!
கட்டுவன் மீதினிலே மறப்போர் புரிந்தாய்
வீழ்ந்தது சிங்கக் கொடி வென்றது புலிக்கொடி
வென்றவர் வரிசையில் வேங்கையாய் நின்று
வித்தாகி மண்ணில் வேர் ஊன்றினாய்

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

**- குடும்பத்தினர்.**

அரியாலை.

(10459)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

# ஐ.தே.க. மறுசீரமைப்பு அ'புரவில் ஆரம்பமாகும்

## -- ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புப்பணி ஜனவரி 28ஆந் திகதி அனுராதபுரத்தில் ஆரம்பமாக இருப்பதாக ஐ. தே. கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கட்சியின் 40-வது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவிக்கையில், ''ஐ.தே.க. இனிமேல் குறுகிய நோக்கத்துடன் செயற்படாது. இனவாதத்திற்கு இனிமேல் எமது கட்சியில் இடமில்லை. சிறுபான்மையினரை அரவணைத்து திட்டங்களைச் செயற்படுத்துவேன்.

''இனப்பிரச்சினை ஐ.தே.க. காலத்தில் ஏற்பட்டதல்ல. இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு எமதுகட்சியில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம்'' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசின் சமாதான முயற்சிகளை வெளிநாடுகளுக்குவிளக்கிக்கூறுங்கள்

## புதிய தூதுவர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு சமாதான ரீதியான அரசியல் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் மிகவும் உறுதியாக பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. இதனை நீங்கள் வெளிநாடுகளிடம் விளக்கிக் கூற வேண்டும். இவ்வாறு சிறிலங்காவின் உயர் ஸ்தானிகர்களாகவும் தூதுவர்களாகவும் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறிலங்காவை பற்றி பல்வேறு நாடுகளில் பரப்பப்படும் தவறான பிரசாரங்களை முறியடிக்க எமது தூதரகங்கள் தொடர்ச்சியாக செய்தியறிக்கைகளை வெளியிட வேண்டும்.

வெளியுறவுச் சேவையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களில் 70 சதவீதமானவை தொழில்சார் இராஜ தந்திரிகள் மத்தியிலிருந்தே தெரிவு செய்யப்பட்டன. ஏனையவர்கள் அவரவரது துறைகளில் கீர்த்தி பெற்று வருபவர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், லக்ஷ்மன் ஜெயக்கொடி, தர்மசிறி சேனநாயக்கா உட்பட பலரும் உரையாற்றினர்.

# வானைக் கடத்திச்சென்ற மாஜிவிமானப்படைஅதிகாரி

[கொழும்பு]

பம்பலப்பிட்டியில் அண்மையில் வான் ஒன்றைக் கடத்திய ஐவர்பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்வானும்மீட்கப்பட்டுள்ளது கைதானவர்களில் ஒருவர் விமானப்படையின் முன்னாள் அதிகாரி என்றும் ஒருவர் ரிசேர்வ்பொலிஸ்கான்ஸ்டபிள் என்றும்மற்றையவர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்றும் தெரியவந்துள்ளது.

இவர்கள் கைத்துப்பாக்கி ஒன்றைக் காட்டியே வானை கடத்தியதாக கூறப்படுகிறது

# போரை நாட்டினால் தாக்கு பிடிக்க முடியாது

## உயர் கல்வியமைச்சர் பத்திரன

நடைபெறும் போரை நாட்டினால் தாக்குப் பிடிக்க முடியாது என உயர் கல்வி கல்வியமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவவுனியா சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

கடந்த 10 வருடங்களாக பயங்கர போர் நடக்கிறது. இதனால் பலர் இறந்துள்ளனர். கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தாது இனப்பிரச்சினை தீர்க்க முடியாது

## முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரதான சக்தியாக விடுதலைப் புலிகளைப் பார்க்கின்றோம். அவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தாமல் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதில் நாம் தெளிவாக இருக்கிறோம். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் மருதூர்க்கனிவிடுத்துள்ள அறிக்கையொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, முஸ்லிம் காங்கிரசை முஸ்லிம் சமூகத்தின் குரலாக பார்க்கின்ற புலிகளின் பார்வையை இட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

சிங்களப் பேரினவாதத்தின் பிடியிலிருந்து - தமிழ் முஸ்லிம் சமூகங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதிலும், வடக்கு -கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றத்தை எதிர்ப்பதிலும் நாம் உடன்பாடு கொண்டிருக்கிறோம்.

தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு சமஷ்டி ஆட்சி - அதில் தனித்தனியே சமூகங்களின் தனித்துவம் பாதுகாப்பு, பிரதேச உரிமைகள் என்னும் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கும் ஒன்றிணைந்து குரல் எழுப்புவதற்கும் நாம் தயாராக இருக்கிறோம். ஒற்றையாட்சிஅதற்கு தடையாக இருக்குமானால் அதை மாற்றி அமைக்குமாறு அரசை வற்புறுத்துவதற்கும் நாம் தயாராக இருக்கிறோம்

தமிழ்பேசும் மக்கள் என்ற அடிப்படையில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒரே வகையான பிரச்சினைகளையே பெரும்பாலும் எதிர் நோக்குகின்றோம்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் அரசியல் சக்திகள் ஒருங்கிணைந்து யோசனையை முன் வைக்க வேண்டும். இதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொஸ்னியாவிற்கு சிறிலங்கா பொலிசார்

ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுகோளுக்கு அமைவாக பொஸ்னியாவில் அமைதி காப்பு பணியில் ஈடுபடுவதற்கு சிறிலங்கா பொலிசாரை அனுப்ப பாதுகாப்பு அமைச்சு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா இது பற்றி மேலும் கூறுகையில், ஐக்கிய நாடுகள் சபை இத்தகைய வேண்டுகோள் விடுத்தமை பற்றி தமக்கு தெரியும் எனவும், எனினும் பாதுகாப்பு அமைச்சும் வெளியுறவு அமைச்சும் இணைந்து இதற்கான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# உணவுப்பொருள் தட்டுப்பாடு தனியார் துறையே காரணம்

## அமைச்சர் அமரசிறி தொடங்கொட

(கொழும்பு)

நாட்டுக்கான உணவுப் பொருட்களின் இறக்குமதியில் 80 சதவீதம் தனியார் துறையைச் சேர்ந்த 18 வர்த்தகப் புள்ளிகளின் கையிலேயே உள்ளது. எனவே, உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்கு தனியார் துறையினரே காரணம். இவ்வாறுகூட்டுறவு, மாகாண சபைகள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற வைபவமொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அங்கு அவர்மேலும் உரையாற்றுகையில், தொடர்ந்தும் இத்தனியார் வர்த்தகர்கள் பொருட்களுக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி மக்களையும் அரசாங்கத்தையும் கஷ்டத்தில் ஆழ்த்த நினைத்தால் அவசரகாலச் சட்டத்தை பாவித்தேனும் அவர்களது அனுமதிப்பத்திரங்களை பறிமுதல் செய்ய தயங்க மாட்டோம்.

கூட்டுறவுத் துறை வலுவிழந்து போயுள்ளதால் வர்த்தகர்களை ஒரேயடியாக கட்டுப்படுத்தவும் அரசாங்கத்தால் முடியாதுள்ளது. பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கி பொருள் விநியோகத்திலும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# மகாபொல உதவிப்பணம் 98 வீதமானவர்க்கு கிடைக்கும்

## பெற்றோர் வருட வருமான உச்சவரம்பு உயர்வு

# 6-ம் ஆண்டில் ஈழநாதம்

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

ஈழநாதம் மக்கள் தினசரி தனது ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதையொட்டி பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

**தலைப்பு:**

''எமது சமூகத்தின் தேவைகளை இன்றைய கல்வி பூர்த்தி செய்கின்றதா''?

**போட்டி விதிகள்:**

- கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்படுவதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும் கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1995 ஜனவரி 31ஆம் திகதிக்கு பிந்தாமல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது
- போட்டி முடிவுகள் 17-2-1995 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்
- இப்போட்டியில் முதலாவது பரிசு பெறும் கட்டுரை ஆறாம் ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப்படும்
- முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு ஆறாம் ஆண்டின் ஆரம்ப நாளில் சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம்-ஆறாம்ஆண்டு போட்டி' எனகடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு;

ஆசிரியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

## பெற்றோர் வருட வருமான உச்சவரம்பு உயர்வு

(கொழும்பு)

கூடுதலான பட்டதாரி மாணவர்கள் மகாபொல புலமைப்பரிசிலையும் உதவிப் பணத்தையும் பெறவுள்ளனர் பட்டதாரி மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் முக்கிய அடிப்படைதகைமையான பெற்றோரின் வருமான உச்சவரம்பு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால்அதிகரிக்கப் பட்டுள்ளது.

1995 ஜனவரி முதல் பட்டதாரி மாணவர்களின் பெற்றோர் வருட வருமான உச்சவரம்பு 48 ஆயிரம் ரூபாவிலிருந்து 90 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது.

இதனால் முன்னைவிட கூடுதலான பல்கலைக் கழக மாணவர்கள் மகாபொல புலமைப்பரிசிலை அல்லது உதவிப்பணத்தை பெற்றுக் கொள்வர்.

நாட்டில் மொத்தம் 35 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களில் 30 ஆயிரம்பேர் இப்போது மகாபொல அல்லது உதவிப்பணத்தை பெற்றுவருகின்றனர். புள்ளி அடிப்படையிலானமகாபொல புலமைப்பரிசில்திட்டத்தின்கீழ் ஒரு மாணவனுக்கு மாதம் 1300 ரூப்பாவும் சாதாரண புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 1250 ரூபாவும் வழங்கப் பட்டுவருகிறது. இதேசமயம் புள்ளி அடிப்படையில் உதவிப் பணமாக மாதம் 1250 ரூபாவும் சாதாரண உதவிப்பணமாக 1150 ரூபாவும் வழங்கப் படுகிறது-

சகல மாணவர்களும் நிதியுதவியை பெறும் வகையில் பெற்றோரின் வருமான உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என மானிய ஆணைக் குழு அறிவித்துள்ளது.

புதிய திட்டத்தின்படி 98 சதவீத பட்டதாரி மாணவர்கள் இந்த நன்கொடையை பெறுவர்.

### வவுனி. கல்விக் கல்லூரிக்கு கட்டடம் நிறுவிய

## கட்டட ஒப்பந்தகாரருக்கு நிலுவை வழங்கவேண்டாமெனஅமைச்சர்பணிப்பு

வவுனியா கல்விக் கல்லூரிக்காக நிறுவப்படும் கட்டடங்களுக்காக ஒப்பந்த காரர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவையை செலுத்துவதை உடனடியாக நிறுத்தும் படி கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

நிர்மாண வேலை உரிய முறையில் மேற்கொள்ளப் படாமை இதற்கான காரணமாகும்.

ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் மேற்படி கல்லூரிக்கு 18 கோடி ரூபா செலவில் புதிய கட்டடத்தொகுதிகள் அமைக்கப்பட்டு பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இக் கட்டடங்கள் தரமற்றவை எனவும் இவை பயன் படுத்த முடியாதநிலையில்இருப்பதாகவும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அறிவித்துள்ளார்கள், சில வகுப்பறைகளுக்குள் மழைநீர் கசிவதாகவும் இதனால் சுவர்கள் இடிந்துவிழும் நிலையில் உள்ளன எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## பொய் மருத்துவ சான்றிதழ் சமர்ப்பித்த பொலிசாருக்கு எதிராக வழக்கு

### சான்றிதழ் வழங்கிய மருத்துவர் மீதும் நடவடிக்கை

இடமாற்றத்தை ஏற்க மறுத்து பொய்யான மருத்துவ சான்றிதழ் வழங்கிய பொலிசாருக்கும், அதற்கு உடந்தையாக-இருந்த வைத்திய அதிகாரிக்கும் எதிராக பொலிசார் சிறப்பு உரிமை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப் போவதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதேவேளை இடமாற்றத்தை ரத்துச்செய்யும் வகையில் வழங்கப்பட்ட போலியான ஆவணங்கள் தொடர்பாக அவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாகவும் பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


மலரும் புத்தாண்டில்
விளையாட்டு ரசிகர்களுக்கு

ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி

6-வது ஆண்டில், காலடி வைக்கும்
ஈழநாதம் மக்கள் தினசரியினர்

மாபெரும் உதைபந்தாட்ட,
வலைபந்தாட்ட போட்டிகளை
நடாத்த உள்ளனர்

★ வெற்றிபெறும் கழகங்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள்
★ வீரர்களுக்கு தனித்தனி சிறப்பு பரிசில்களும் சான்றிதழ்களும்
★ ரசிகர்களுக்கு பிரவேசம் முற்றிலும் இலவசம்

மேலதிக விபரங்கள் இன்னும் சில தினங்களில்

ஈழநாதம் தினசரியில்!

# நடவடிக்கை ஒருங்கிணைப்பிற்கு கைத்தொழில் அதிகாரசபை

(20.12.94 அன்றைய தொடர்ச்சி)

**5.2சீமெந்து உற்பத்தி**

சீமெந்து தொழிற்சாலை அரசினால் அமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் குறிப்பிடத்தக்க ஒன்றாகினும் இது மீளப்பெற முடியாத எமது வளங்களைச் சுரண்டி பணம் சம்பாதிக்க அமைக்கப்பட்டதுடன் நீண்டகாலம் இயங்கமுடியாத நிலையையும் கொண்டிருக்கின்றது இதனால் எமது நிலப்பரப்பும் பெரிதும் பாதிப்படைகின்றது. எனினும் இத் தொழிற்சாலையை விஸ்தரிக்க இடமளிக்கக்கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

5.3 மற்றும் கண்ணாடித் தொழிற்சாலை, பிளாஸ்ரிக் தொழிற்சாலை, இறப்பர் சார் தொழிற்சாலை (ரயர், ரியூப்) போன்றவை இங்கு இயங்கி வந்து தற்போது செயலிழந்தவையாகும். எனவே இவை புனரமைப்பு செய்யப்பட்டு உற்பத்தி ஆரம்பிக்கப்படவேண்டும்.

5.4 மேலும் எமது தேவைக்கு அத்தியாவசியமான நுகர்வுப் பொருட்களான தீப்பெட்டி, சவர்க்காரம், பற்பசை போன்ற தொழிற்சாலைகளும் இங்கு அமைக்கப்பட வேண்டியது கருத்திலெடுக்கப்பட்டு இடங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**06.1 உயர்நுட்பவியல்கைத் தொழில்கள்**

உயிரியல் சார் கைத்தொழில் யாழ்ப்பாணத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இன்றைய நவீன தொழில்நுட்பங்கள் இணைக்கப்பட்டு குளுக்கோஸ் போன்ற உற்பத்திகள் செய்ய ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

**07. கட்டடப் பொருட்கள் தொழிலகங்கள்**

**7.1சீமெந்துசார் உற்பத்திகள்**

சீமெந்தை அடிப்படையாகக் கொண்ட கட்டிட நிர்மாணத்திற்குதேவையான கூரைத்தகட்டு தொழிற்சாலை, கொன்கிறீற் பைப் தொழிற்சாலை என்பனவும் புனரமைக்கப்பட வேண்டும். அத்துடன் கொன்கிறீற் தகடுகள் (blocks and slabs) தொழிற்சாலையொன்றும் காங்கேசன் துறையில் அமைக்கப்படுவது கட்டுமான வேலைகளுக்கு உதவியளிக்கும்.

**7.2 ஒட்டுத் தொழிற்சாலை**

வடபகுதியில் ஓட்டுசுட்டானில் அமைக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலை நாளொன்றுக்கு சராசரியாக 8000 துண்டுகள் (ஓடு, முகட்டோடு, செங்கல், ஒட்டைக்கல் வகைகள்) உற்பத்தி செய்யக்கூடியது, எனவே இத்தொழிற்சாலை நவீன முறையில் புனரமைப்பு செய்யப்பட வேண்டும். இத்தொழிற்சாலை எமது தேவையைப் பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**7.3 மர அரிவு நிலையம், தளபாடங்கள்**

புனரமைப்பு, புனர்வாழ்வு, வேலைகள் ஆரம்பிக்கப்படும் போது மரப்பலகைகள் தீராந்திகளின் தேவை மிக அதிகமாக தேவைப்படும் இதற்காக எமது காட்டு வளத்தின் பெரும்பகுதி பாதிப்படையும் நிலை ஏற்படும், எனினும் தெரிவு செய்யப்படும் பனை, தென்னை மரங்களிலும் காட்டுமரங்களிலுமிருந்து பலகைகள் அரிவதற்கான நவீன அரிவு ஆலைகள் நிலை, யன்னல், கதவு போன்ற உற்பத்திகளையும் மேற்கொள்ளக் கூடிய இயந்திர அமைப்புக்களும் அமைக்கப்படல் சிறந்ததென கருதப்படுகின்றது. இதற்கான ஆலைத் தொகுதியொன்று கிளிநொச்சியில் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

**08. வேறு வகைகள்**

இதுவரை கூறப்பட்டவை தவிர்ந்த சில கைத்தொழில்களும் தேவைகருதி இனம் காணப்பட்டுள்ளன. அவை யாவன:

01. தீந்தை உற்பத்தி
02. மென்பான உற்பத்தி
03. பிஸ்கட் உற்பத்தி
04. புகையிலை பதனிடல்
05. பொதியிடும் பொருட்கள் உற்பத்தி.
06. மட்பாண்ட உற்பத்தி
07. வார்ப்புத் தொழிற்சாலை
08. பொலித்தீன் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை
09. கல் உடைக்கும் ஆலை

**09. மின் இயந்திரவியல் சார் கைத்தொழில்கள்**

தேவை, வேலைவாய்ப்புக் கருதி கைத்தொழில் பேட்டையில் அமைக்கப்பட வேண்டிய மின் இயந்திரவியல் சார் தொழிற்சாலைகள் இனங் காணப்பட்டுள்ளன. இவை நீண்டகால நகர்வில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் வரும் பெரும்பான்மையான கைத்தொழில்கள் இறக்குமதி மூலப்பொருட்களிலேயே தங்கியுள்ளன.

**கைத்தொழில்கள்**

9.1. ஒலி, ஒளி கேட்கும் பார்க்கும் இயந்திரங்கள்
9.2. வீட்டுப் பாவனை உபகரணங்கள்
9.3. அலுவலகஉபகரணங்கள்
9.4. மருத்துவ வேலைக்கான உபகரணங்கள்
9.5. ஊர்திகளுக்கான மின் உபகரணங்கள்
9.6. ஒளியூட்டும் மின் குமிழ்கள்
9.7. மின்பிறப்பாக்கிகளும் அதன் உபகரணங்களும்
9.8. கணனிகள் அதன் உதிரிப்பாகங்கள்
9.9. தொலைத் தொடர்புச் சாதனங்கள்

**நீண்டகால அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்கள்**

இரண்டாம் கட்டமாக எடுத்த நகர்வு பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. எமக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய நிலையை கருத்தில் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத் தொழிறசாலைகளை மாங்குளம், திருமலையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கைத்தொழில் பேட்டையில் அமைப்பது சிறப்புடையது என்பது எமது கணிப்பாகும்.

கைத்தொழில்களை மேம்படுத்தவும் வழிப்படுத்தவும் தேவைப்படும் அமைப்புகளின் விபரம் வருமாறு.

01. கைத்தொழில் உணவு பதனிடல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்
02. கைத்தொழில் மேம்பாட்டு அதிகார சபை
03. கைத்தொழில் பேட்டைகள்

இவற்றின் செயற்பாடுகள் சில,

**ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்**

1.1. கைத்தொழில் தொடர்பான ஆய்வுகள், உணவு பதனிடுதல் சம்பந்தமான ஆய்வுகள்
1.2. தரக்கட்டுப்பாடு
1.3. பயிற்சி அமைப்புக்கள்
1.4. கைத்தொழில் பூங்கா
1.5. தொழில்நுட்ப அபிவிருத்தி

**கைத்தொழில் மேம்பாட்டு அதிகார சபை**

2.1. பயிற்சி வழங்கல்
2.2. ஆலோசனை அமைப்புக்கள்
2.3. புள்ளிவிபர சேகரிப்பு அமைப்புக்கள்
2.4. கைத்தொழில் கொள்கை திட்டமிடல் (மாற்றங்கள்)
2.5. கைத்தொழில் பேட்டை அமைத்தல், நிர்வகித்தல்
2.6. கைத்தொழில் அபிவிருத்தி வங்கி
2.7. கைத்தொழில் ஏற்றுமதி இறக்குமதி சபை
2.8. மனிதவள அபிவிருத்தி நிலையம்
2.9. தொழில் வல்லுனர் ஒன்றிணைப்பு மையம்

சிறிலங்கா அரசினால் எமது நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக

1. மன்னாரில் எண்ணெய்க்கான ஆய்வு
2. மணலிலிருந்து சிலிக்கா பெறுவது பற்றிய ஆய்வு
3. கச்சாயில் உப்பு ஏற்றுமதிக்கான நிலைய ஆய்வு.

## கணிதம் செயலமர்வு

யாழ். வலயம் 1, கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் உயர்தரக் கணிதக் கழகம் நடாத்தும் 'கணித பாடச் செயலமர்வு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை 23-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. வேலணை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, யாழ்., நல்லூர் கோட்டங்களைச் சேர்ந்த உயர்தர வகுப்புகளில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இச் செயலமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்

## 5 நாள் தொடர்புறு வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தொலைக்கல்வி நிலையத்தில் தொடர்புறு வகுப்பு வரும் 23ஆந்திகதி தொடக்கம் ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளன.

இவ் வகுப்புகளுக்கு 91 - 94, 93 - 95 ஆசிரிய மாணவர்களையும் போதனாசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் அன்றைய தினம் மொடியூல்களும் வழங்கப்படுமென்றும் சிரேஷ்டபோதனாசிரியர் கேட்டுள்ளார். (சி)

## சீனி, மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் பாவனையாளர்களுக்கு தலா இரண்டு கிலோ சீனியும் ஐந்து கிலோ மாவையும் உடனடியாக பல நோ. கூ. சங்கங்கள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விநியோகத்திற்குத் தேவையான மாவையும் சீனியையும் பல நோ. கூ. சங்கங்களிற்கு புனர்வாழ்வுப் பகுதியினர் தற்சமயம் வழங்கி வருகின்றனர். (பா, இ)

## சங்கிலி அபகரிக்க முயன்றவர் சிறையில்

இரவில் வீதியில் சென்ற பெண்ணிடம் தங்கச்சங்கிலியை அபகரிக்க முயன்று அகப்பட்ட நபருக்கு சாவகச்சேரி நீதிமன்று சிறைத்தண்டனையும் குற்றப்பண அறவீடும் வழங்கி தீர்ப்பளித்தது.

## குற்றப்பணம் சிறைத் தண்டனை

சமூகச் சீர்கேடு புரிந்த ஆண், பெண் இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்று குற்றப்பணமும், சிறைத்தண்டனையும்


## மானிப்பாய் கோவில்பற்று பல நோ. கூ. சங்கம்

சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கான விண்ணப்பங்கள் 31 - 12 - 1994 திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

லிகிதர் குறியீட்டு இல. 302:16

தகைமைகள்:- க. பொ. த. (சாதாரணம்) தரத்தில் 2 அமர்வுகட்கு மேற்படாமல் எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ தூயகணிதம், சிங்களம் / தமிழ்பாஷை என்பனவற்றை உள்ளடக்கியதான 6 பாடங்களில் சித்தி.

மேலதிக தகைமைகள்:- கூட்டுறப் பயிற்சிபெற்றவராகவும், கூட்டுறவுத்துறையில் அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

வயது:- '18 - 40 வரை (சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கட்டுப்பாடு இல்லை)

சம்பளம்: 700 - 950 / 15×10-20 ×5

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ரூ. 5/- செலுத்தி சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பத்திரத்தை பூரணப்படுத்தி, ''தலைவர், மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய்'' என்ற விலாசத்திற்கு 31-12-1994 - ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்
மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்
(சி-10964)



## தமிழீழ மக்களிற்கு ஓர் நற்செய்தி

## மலிவு விற்பனை

பட்டுச் சேலைகள்
பட்டு வேட்டி
சாறி வகைகள்
மாட்டீன் ஷேட்ஸ்
சூட்டிங்ஸ்
சகலவிதமான பிளவுஸ் பீஸ்வகைகள்

## சோதி புடைவையகம்

14, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்

கிளைஸ்தாபனம்: சோதிபுடைவையகம்
இணுவில்
(சி-10957)

# மலரும் புத்தாண்டில்
# பாடசாலை பேருந்துப்பணி

## 1995 தைத் திங்கள் 5 -ம் திகதி முதல்

## தமிழீழ போக்கு வரவுக் கழகத்தின்

மற்றுமோர் பாடசாலை பேருந்துப்பணி

புன்னாலைக்கட்டுவனில் இருந்து பலாலி சாலை ஊடாக யாழ் நகரின் பிரபல பாடசாலை ஆசிரியர், மாணவர்களின் பேருந்துப்பணி

பருவகால சீட்டுக்களை பேருந்திலும் காரியாலயத்திலும் பெற்றுக் கொள்ள விரையுங்கள்

ஆசிரியர், மாணவர்களின் பருவகால சீட்டுக்களும் தினசரி சீட்டுக்களும் பேருந்திலும் பெற்றுக் கொள்ளலாம்

விபரங்கட்கு:

## தமிழீழ போக்கு வரவுக் கழகம்,

**பருத்தித்துறை சாலை, கல்வியங்காடு.**

கல்விப்பணியே எமது கழகத்தின் பணி

(10462)


சமூகச் சீர் கேடு புரிந்த ஆண், பெண் இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்று குற்றப்பணமும், சிறைத்தண்டனையும் தீர்ப்பாகவழங்கியது.

மீசாலை தெற்குப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் திருமணமான 4 பிள்ளைகளின் தந்தையுடன் குடும்ப உறவில் ஈடுபட்டு இருவரும் சமூக சீர்கேட்டினை புரிந்தமைக்காக சாவகச்சேரி காவல் துறையினர் இருவரையும் மன்றில் முற்படுத்தினர். இருவரும் குற்றத்தினை ஒப்புக் கொண்டதினை அடுத்து நீதியாளர் திரு. சுடர் அவர்கள் பெண்ணுக்கு 3மாத கால சிறையும் குற்றப்பணமாக 2000 - ரூபாவும் பணம் கட்ட தவறின் 80 நாட்கள் கட்டாய சமூக சேவை எனவும், ஆணுக்குகுற்றப் பணமாக5000/- ரூபாவும் 3 மாதம் சிறை எனவும் பணம் கட்டத் தவறின் 200 நாட்கள் கட்டாய சமூக சேவைவளனவும் எச்சரித்து தீர்ப்பளித்தார். (86)

## இறைச்சி சோதனை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வன்னி மாவட்டத்தில் உள்ள கிளிநொச்சியிலும் இறைச்சிப் பரிசோதனைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

நோயுற்ற கால்நடைகள், கற்பமுற்ற பசுக்கள், கன்றுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதை தடுக்கவும், நுகர்வோர் சுகாதாரமான முறையில் நல்ல இறைச்சியைப் பெறவும் இத்திட்டம் மூலம் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 129 மாடுகளுக்கும் 72 ஆடுகளுக்கும் இறைச்சிப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

வடதமிழீழம் முழுவதும் இத்திட்டம் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.


# A/L 95

## கணித - உயிரியல் பிரிவு

பகல் முழுநேர - மாலை நேர
மீட்டல் வகுப்புகள்

## ஆரம்பம்: 23-12-94

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | : | திரு. செல்வா |
| பௌதிகவியல் | : | திரு. ஞானி |
| | | திரு. வர்ணம் |
| | | திரு. ரவீந்திரநாதன் |
| தூய/பிரயோக | ( | திரு. குணம் |
| கணிதம் | ( | திரு. கிருஷ்ணா |
| தாவரவியல் | : | திரு. ஐங்கரநேசன் |
| விலங்கியல் | : | திரு. கெங்காதரன் |

- முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்
- பாடசாலை செல்லாதவர்கள் மாத்திரமே பகல் முழுநேர வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.
- 22-12-94 அன்று மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.
- நேரசூசிகையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
- 94இல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## யூனிவேர்சல்

**கந்தர்மடம் - யாழ்ப்பாணம்**

(சி-10935)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

**சிந்தனைக்கு..**

ஒரே கல்லில் இருமுறை இடறுவது அவமானம்.

கிரேக்க பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# குழப்பம் நிறைந்த சந்திரிகா அரசு

நேற்றோ அல்லது இன்றோ நடைபெறவிருந்த புலிகள்-அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகள் பிற்போடப்பட்டுவிட்டன. அரசாங்கம் இறுதி நேரத்தில் தனது நிலைப்பாட்டில் மேற்கொண்ட மாற்றமே இவ்வாறு பிற்போடப்பட்டமைக்குக் காரணம் எனத் தெரியவருகின்றதுது.

விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கனவே இருவார காலத்திற்கு போர் நடவடிக்கைகளை இடைநிறுத்தும் அரசாங்கத்தின் யோசனைக்கு இணக்கம் தெரிவித்தது. அத்தோடு போர் நடவடிக்கைகள் இடைநிறுத்தத்தின் போது இருதரப்பினரும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றியும் பேசி முடிவெடுக்கவும் உடன்பட்டிருந்தது.

ஆகையினால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து அரசாங்கமே முடிவெடுக்க வேண்டிய நிலையில் இருந்தது. அரசாங்கம் இது குறித்து பலநாள் ஆய்வும் செய்தது. இதன் பின்னர் அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பாக தனது நிலைப்பாட்டில் மாற்றம் செய்துள்ளதாகத் தெரிகின்றது. அதாவது பேச்சுவார்த்தை தொடர்பாக ஆராயப்பட்ட போது எழுந்த நிர்ப்பந்தங்களுக்கு அரசாங்கம் பணிந்து செயற்பட்டுள்ளதாகவே எண்ண வைக்கின்றது.

இல்லாதுபோல், அதாவது ஏற்கனவே பரிமாறப்பட்ட கடிதங்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் தயாராக இருந்திருப்பின் இவ்வாறு பிற்போடப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், விடுதலைப் புலிகளின் தரப்பில் இருந்து பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை எவையும் எழவில்லை, அவர்கள் புதிய நிபந்தனைகள் எதையும் அறிவிக்கவும் இல்லை.

சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கமானது ஆரம்பம் முதலே இவ்வாறான தடுமாற்றத்துடன் கூடிய கொள்கையையே கடைப்பிடிப்பதை அவதானிக்க முடிகின்றது. ஆரம்பத்தில் இனப்பிரச்சினை சமாதான தீர்வு கண்டே ஆவோம் என ஆவேசம் பொங்கப் பேசிய ஜனாதிபதி சந்திரிகா ராணுவத்தரப்பையும் உதாசீனம் செய்வது போன்று நடந்து கொண்டார். இனப்பிரச்சினைக்கு சமாதானத்

# ரஷ்ய துருப்புகள் செச்னிய தலைநகரை இப்போது கைப்பற்ற முனையாது

ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்ற செச்னிய குடியரசின் தலைநகர் குரோஸ்னிக் இப்போது ரஷ்ய துருப்புக்களின் முற்றுகையில் உள்ளது. தொடர்ந்து நகர்மீது ரஷ்ய பீரங்கிகள் முழங்குகின்றன. இளைஞர்கள் வீதிகளில் துப்பாக்கிகளுடன் நிற்கின்றனர் பெண்களையும் குழந்தைகளையும் காணவில்லை.

செச்னியாவினுள் ரஷ்யதுருப்புக்கள் புகுந்து இரண்டு வாரங்களாகின்றன. குரோஸ்னிய நகரின் மத்தியில் உள்ள ஜனாதிபதி மாளிகையிலிருந்து ஒரு மைல் தொலைவில் ரஷ்ய விமானங்கள்கடும் குண்டு வீச்சை நிகழ்த்தியுள்ளன. இக்குண்டுவீச்சினால் வீதியின் சந்தியில் ஆறு அடி ஆழமும் ஆறு அடி அகலமும் கொண்ட பள்ளம் ஏற்பட்டுள்ளது இச்சந்திப்பகுதியிலிருந்த ஆறு வீடுகள் குண்டு வீச்சில் தரைமட்டமாகியுள்ளன அங்கு எரியும் தீ மக்களின் உணர்வுகளிலும் பரவுகின்றது. இக்குண்டு வீச்சில் ஒருவர் பலியானார் 9பேர் காயமடைந்தனர். தொலைக்காட்சி நிலையம் ஒன்றை இலக்குவைத்தே குண்டு வீசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

செச்னியர்கள் ஆயுதங்களை கீழே போடவேண்டும்

> செச்னிய நிலைபரம் குறித்து பி. பி. ஸி ஒலிபரப்பிய தகவல்களை இங்கு தருகின்றோம்.

என ரஷ்ய ஜனாதிபதி யெல்சின் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளதால் ரஷ்ய படைகள் தாக்குதலை நடத்தி வருகின்றனர் இது குறித்து செச்னிய ஜனாதிபதி டு-யேவ் கருத்து தெரிவிக்கையில் ரஷ்யாவுடன் நாம் இப்போது போர் செய்கிறோம் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் எங்கள் நாட்டை அழிக்க அவர்கள் இயலுமானவரை முயல்கின்றனர்.

இந்தப்பேய்தனம் செச்னிய உணர்வுகளை அழிக்கவும் வெற்றிகொள்ளவும் முடியாது என்றார். ரஷ்யர்களுக்கு அமைதிப் பேச்சில் ஆர்வமில்லை என செச்னிய அரசு கூறியுள்ளது. முதலில் பெரும் படையை எமது நாட்டினுள் அனுப்பினர் பின்னர் பேச்சுவார்த்தை குறித்து பேசுகின்றனர் ஒரே நேரத்தில் ரஷ்யர்கள் இரண்டு முறைகளை கையாள்கின்றனர். நகர்களும், கிராமங்களும் ரஷ்யரால் அழிக்கப்படுகின்றது. அதேசமயம் பலவந்தம் பிரயோகிக்க விரும்பவே இல்லை என்றும் கூறுகின்றனர். இது ஏமாற்று வேலையா அல்லது அவர்களின் இராணுவம் இங்கு செய்வதை அவர்களது தலைவர்கள் அறியவில்லையா என்பது செச்னிய அரசுப்பேச்சாளரின் கேள்வி.

செச்னிய முஸ்லிம் படைகள் போரில் இறந்த தமது நண்பர்களுக்காக வருந்துகின்றனர். ஆனால் போர்குணம் கொண்ட அவர்களின் மனங்களில்இன்னமும்சோர்வில்லை இதை ஓர் புனிதப் போராக அவர்கள் கருதுகின்றனர்.

ரஷ்யப்படை இராணுவ ரீதியில்சிறப்புறஇருந்தாலும் அவர்களிடையே குழப்பமே நிலவுகின்றது.

நிலைமையைதீர்மானிக்கவே முடியவில்லை என ரஷ்யபடை வீரர் ஒருவர் புலம்புகிறார். என்ன எப்போது எமக்கு நடக்கும் என்பது தெரியவே இல்லை. நாம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறோம். சினைப்பர் சூட்டிற்கு இலக்காகின்றோம். எம் உற்சாகத்தை இழக்காதிருக்க முயல்கிறோம் ஆனால் குறோஸ்னிக்கில் பிணைக்கைதிகளாக உள்ள 20 பேர் குறித்தும் எந்த தகவலும் இல்லை என அப்படை வீரர் கூறுகிறார்.

ரஷ்யா தனது இராணுவ பலத்தைக்காட்டிக் கொண்டிருந்தாலும் மாஸ்கோவில்அதிகார பீடம் முடிவெடுக்க முடியாமல் திணறுகிறது. மூக்கில் அறுவைச்சிகிச்சை முடிந்து தேறிவரும் ரஷ்ய ஜனாதிபதி யெல்சின் இருவாரமாக வெளியே வரவில்லை. செச்னியா விவகாரத்தில் அவரின் நிலை தெளியவில்லை. யெல்சினின் நெருங்கியவர்கள் சிலர் இராணுவ நடவடிக்கையை எதிர்கின்றனர். ஆனால் சில தீவிரவாத தலைவர்கள் இராணுவ நடவடிக்கையை ஆதரிக்கின்றனர்.

ரஷ்ய பாதுகாப்பமைச்சர் கிராசோவ் நிலைமையும் குழப்ப நிலையில் உள்ளது. அவர் தாக்குதலை ஆதரிக்கிறாரா அல்லது செச்னிய வெறுப்பை தவிர்க்க விரும்புகிறாரா என்பது தெரியவில்லை. ரஷ்யாபடைகள் குரோஸ்னிக்கின் கதவை தட்டலாம் ஆனால் இப்போதைக்கு அதை கைப்பற்ற முழுமனதுடன் ஈடுபட மாட்டார்கள். ஏனெனில் நான்குலட்சம்பேர் வாழும் அந்நகரில் இதனால் பல பிரச்சினைகள் தோன்றலாம் என ரஷ்ய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# வெள்ளி முதல் பொஸ்னியாவில் போர் நிறுத்த பிரகடனம்

## காட்டரின் சமரச முயற்சி வெற்றி

(சரஜேவோ)

பொஸ்னிய அரசு எதிர்வரும் 23 முதல் நான்குவார போர் நிறுத்தம் செய்ய சம்மதித்துள்ளது. பொஸ்னியாவில் இப்போது சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி காட்டர் பொஸ்னிய சேர்பிய தலைவருடன் பேசியபின் இம்முடிவு ஏற்பட்டுள்ளது.

காட்டரின் சந்திப்பின் பின் கருத்து தெரிவித்த பொஸ்னிய தலைவர் பேச்சு மூலம் சமரசம் காண சம்மதித்துள்ளதாக கூறினார். பொஸ்னிய ஹெக்சகோவியாவை புவியியல் ரீதியில் பரிக்கும் வரைபடம் குறித்து எந்த சமரச முயற்சியும் தம்மால் ஏற்கப்படாது என்றும் அவர் கூறினார். இந்த வரைபடத்தின் படி சேர்பியர்களுக்கு 45 சதவீத நிலம் கிடைக்கின்றது.

போர் நிறுத்தம் ஏற்பட்டதும் அதை பொஸ்னியாவில் உள்ள ஐ. நா. படை கண்காணிக்கும்.

# ஜார்கண்ட் பகுதி மக்களுக்கு சுயாட்சி பிரதேசம் அமைப்பு

## பீஹார் சட்டப்பேரவையில் நிறைவேற்றம்

(டில்லி)

பீஹார் மாநிலத்தின் தெற் ... றியது. 50 ஆண்டுகால கிளர்ச்சியை முடித்துவைக்கும் ... கவுன்சில் நிர்வகிக்கும். ஜார்கண்ட் தனிமாநிலம் கோரப்

# அன்ரனா இணைத்தவர்கள் தவறி வீழ்ந்து மரணம்

(கொழும்பு)

சுமார் 200 அடி உயரத்தில் தொலைக் காட்சி அன்ரனா கோபுரம் ஒன்றைப் பொருத்திக் கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் தவறி வீழ்ந்து ஸ்தலத்திலேயே மரணமாகினர். இன்னொருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் பிங்கிரிய என்னுமிடத்தில் நடந்துள்ளது. 330 அடி உயரத்தில் இந்த அன்ரனாவை தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்காக பொருத்துவதில் 200 அடி உயரத்தில் இருந்தவாறு ஈடுபட்டிருந்தனர். அன்ரனா திடீரென ஒரு பக்கம் சரிந்ததனால் மூவரும் கீழே விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### 1990 இல் பதிவு செய்த

# நூலகவியல் பரீட்சை குறைந்த மாணவர் சித்தி

(திருநெல்வேலி)

இலங்கை நூலகச்சங்கத்தினால் நடாத்தப்படும் நூலகவியல் தகவல் விஞ்ஞானம் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளன.

இப்பரீட்சை முடிவுகளில் 1990-ம் ஆண்டு பதிவு செய்த ... மான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

1989-ம் ஆண்டின் பின்னர்- நூலகச் சங்கத்தின் பரீட்சைகளெதுவும் வடபகுதியில் நடைபெறவில்லை. 1990-ம் 93-ம்ஆண்டு இரு தொகுதி மாணவர்களுக்கும் ஒன்றாகவே பரீட்சை நடாத்தப்பட்

ஆவோம் என ஆவேசம் பொங்கப் பேசிய ஜனாதிபதி சந்திரிகா ராணுவத்தரப்பையும் உதாசீனம் செய்வது போன்று நடந்து கொண்டார். இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்போகும் எனக்கு இராணுவத்தின் உதவி தேவையே இல்லை என்றார்.

ஆனால் பதவி ஏற்றதன் பின்னர் இராணுவத்தின் அழுத்தங்களுக்கும் பணிந்தார். இராணுவத்துடன் சமரசம் செய்து கொண்ட அவர் இராணுவத்தின் தேவைகளை நிறைவு செய்து வைத்தார். இராணுவத்தினரின் நிலைப்பாட்டையும் ஏற்றுக் கொண்டார்.

இதற்குச் சிறப்பான உதாரணமாக யாழ். குடாநாட்டிற்கான பாதை திறப்பு விவகாரத்தைக் குறிப்பிட முடியும். ஆரம்பத்தில் பூநகரிப்பாதையைத் திறப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகத் தெரிவித்தது. ஆனால் இராணுவத்தினர் கொடுத்த அழுத்தத்தின்பின்னர் பூநகரிப்பாதை திறப்பது தொடர்பாக அரசாங்கம் பேசுவதையே நிறுத்திக் கொண்டது. பாதை திறப்பது தொடர்பாக இராணுவமே தற்பொழுது பேசுகின்றது. ஒரு சில அமைச்சர்கள் இது குறித்துப் பேசினாலும், அதுவும் இராணுவத்தின் குரலாகவே உள்ளது.

இதேபோன்றே இனப்பிரச்சினை எமது உள்நாட்டுப் பிரச்சினை. இதில் வெளியார் தலையீடு, மத்தியஸ்தம் தேவைப்படாது எனச் சந்திரிகா அரசாங்கம் கூறி வந்தது. ஆனால் நடைமுறையில் வரிக்கு வரி இந்தியாவின் அங்கீகாரத்திற்காகக் காத்திருக்கின்றது. செயற்படுகின்றது. இந்தியாவின் ஆலோசனை இன்றி ஒரு சிறு நகர்வையும் அது மேற்கொள்ள முயற்சிக்கவில்லை என்றே தெரிகின்றது:

இந்தவகையில் சந்திரிகா அரசாங்கத்தின் கொள்கைகள் நேரத்திற்கு நேரம் மாறுபவையாகவும், பிற அழுத்தங்களுக்கு உள்ளாகுபவையாகவுமே உள்ளன. இந்த நிலையானதுசந்திரிகாஅரசாங்கத்தின்அரசியற் தெளிவின்மையையும், அனுபவமின்மையையும்காட்டுவதாகவேஉள்ளது. சந்திரிகா அரசாங்கத்தின் இவ்வாறான அணுகுமுறை தனியாக இனப்பிரச்சினையில் மட்டுமல்ல சகல விடயங்களிலுமே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

ஆனால் இது ஒருஆரோக்கியமான நிலையல்ல. மிகவும் சிக்கல் வாய்ந்த இனப்பிரச்சினையை அரசாங்கத்தின் நிலைப்பாடானது மேலும் சிக்கலாக்கவே உதவும் இதே நேரம், நேரத்திற்கு நேரம் மாறி வரும் அரசாங்கத்தின் கொள்கையானது இறுதியில் ஐ.தே.கவின் நிலைப்பாட்டை நோக்கியே செல்லவைக்கும். சமாதான முயற்சியில் திடமான கொள்கை எதையும் அமுல்படுத்த முடியாத அரசாங்கம் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என எதிர்பார்த்திருப்பது தப்பாக முடியலாம்.

(டில்லி)

பீஹார் மாநிலத்தின் தெற்கே வாழும் பழங்குடிகளுக்கு ஜார்கண்ட் எனும் சுயாட்சி பகுதி ஒன்றை உருவாக்கும் சட்டத்தை பீஹார் மாநில சட்டப்பேரவை நிறைவேற்றியது. 50 ஆண்டுகால கிளர்ச்சியை முடித்துவைக்கும் வகையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

இரண்டு லட்சம் பேர்வாழும் இப்பகுதியை ஒரு புதிய கவுன்சில் நிர்வகிக்கும். ஜார்கண்ட் தனிமாநிலம் கோரப்பட்டபோதும் அதற்கு பதிலாக சுயாட்சிபகுதி உருவாக்கம் ஒரு முன்னேற்றமே என கருதப்படுகிறது.

இப்பரீட்சை முடிவுகளில் 1990-ம் ஆண்டு பதிவு செய்த மாணவர்களில் ஒரு வீதத்திற்கும் குறைவான மாணவர்களே சித்தியடைந்துள்ளனர்.

1993-ம் ஆண்டு பதிவு செய்த மாணவர்களில் 80 வீத 93-ம்ஆண்டு இரு தொகுதி மாணவர்களுக்கும் ஒன்றாகவே பரீட்சை நடாத்தப்பட்டது. ஆனால் இரு வேறு விரிவுரையாளர்கள் விரிவுரைகளை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆற்றல் ஊக்கி மருந்து அருந்திய

## 11 சீன நீச்சல் வீரர்கள் போட்டியில் பங்குபற்றதடை

கடந்த ஒக்டோபரில் ஹீம்ராசிமாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஊக்க மருந்துகளை உட்கொண்டதாக கண்டு பிடிக்கப்பட்ட 11 சீன நீச்சல் பந்தய வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளனர்.

ஆற்றல் அதிகரிக்கும் தடை செய்யப்பட்ட இம்மருந்துகள் சீனாவில் உபயோகிக்க தடையுள்ளது என்றும் இது வீரர்களின் தனிப்பட்ட செயலே என்றும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அண்மைக்காலத்தில் நீச்சல் பிரிவில் சீனப் பெண்கள் உலகப் போட்டிகளில் பெரும் வெற்றிகள் பெற்றது மேற்குலகப் பயிற்சியாளர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. சீன வெற்றிக்குபின் ஆற்றல் அதிகரிக்கும் ஸ்ரோயிட்டுகள் உள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 12. 22**
**வியாழன் இரவு**

08. 01 - சொல்லுங்கள் பார்க்கலாம்
08. 10 - சித்தமருத்துவக் குறிப்புகள்
08. 20 - உழைப்போம் உயர்வோம் - ''சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதும், எதிர்காலத்திற்கான அடித்தளமாக அமைவதும் உட்கட்டுமானம்' சித்திரம்
08. 30 - செய்திகள்
08. 40 - ஏட்டிலிருந்து ''எரித்திரியா ஒரு நாட்டின் உதயம்'' என்ற நூலிலிருந்து- ''ஒரு நாடு உதயமாகிறது'' எனும் கட்டுரை
08. 50 - மலரும் மொட்டுக்கள்
09. 00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994. 12. 23**
**வெள்ளி காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - மணியாரம்
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 தாயகப்பாடல்கள்
08. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

விறகு வியாபாரியை மோதிக்கொன்ற

## சாரதி இழப்பீடு செலுத்த சாவ. நீதிமன்று தீர்ப்பு

(தென்மராட்சி)

சைக்கிளில் சென்ற வியாபாரி மீது வானை மோதியதில் இடம்பெற்ற உயிரிழப்பிற்கு வான்சாரதியின் தவறே காரணம் எனக் கண்டசாவகச்சேரி நீதிமன்று வான்சாரதியை பலியானவரின் குடும்பத்தினருக்குஇழப்பீட்டுதொகையைகட்டும்படிதீர்ப்பளித்தது.

நாவற்குழிபகுதியில்வீதியில் விறகுகட்டி சென்ற சுழிபுரத்தை சேர்ந்த ஆ. நடராசா என்பவர் அண்மையில் வான் ஒன்றினால் மோதுண்டு மரணமானார். வான் சாரதியின் கவனயீனமே இதற்கு காரணம் என வழக்கு பதிவாகியிருந்தது வழக்கை விசாரித்த மன்று சாரதியை குற்றவாளியாக கண்டது. இறந்தவரின் குடும்பத்திற்கு 70 ஆயிரம் ரூபா கட்டும்படியும் குற்றப்பணமாக 7 ஆயிரம் ரூபா கட்டும்படியும் குற்றப்பணம் கட்டத்தவறின் 280 நாள்கள் கட்டாய சமூகசேவை செய்யவும் தீர்ப்பளித்தது.

## இந்திய-சீன ராணுவபயிற்சி நடைபெறமாட்டாது

(பீகிங்)

இந்திய-சீன இராணுவங்கள் அடுத்தாண்டு முதல் கூட்டுப்பயிற்சியில் ஈடுபடும் என வெளியான செய்தியில் எந்த உண்மையும் இல்லை என சீனா அறிவித்துள்ளது.

இந்திய-சீன உறவு கட்டியெழுப்பப்பட்டு வரும் இவ்வேளையில் இருநாடுகளினதும் இராணுவம் கூட்டு பயிற்சியில் ஈடுபடுவர் என சில தினங்களின் முன் இந்தியத்தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

## வெள்ளை மாளிகை மீது மீண்டும் துப்பாக்கிச் சூடு

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகைக்கு வெளியே இன்னுமோர் துப்பாக்கிச்சூட்டுசம்பவம் நிகழ்ந்துள்ளது. இதில் எவரும் காயமடையவில்லை. துப்பாக்கிச் சூடுநடைபெற்றபோது கிளின்டன் அலுவலகத்தில் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக துப்பாக்கிநபர் ஒருவர்பொலிசாரால் காலில் சுடப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் நடைபெற்ற பென்சில்வேனியா வீதி மூடப்பட்டுள்ளது. வெள்ளை மாளிகைக்கு வெளியே கடந்த மூன்று தினங்களில் நடந்த இரண்டாவது துப்பாக்கிச் சூட்டு சம்பவமாக இது உள்ளது.

## தமது நியமனத்தை உறுதி செய்ய கோரிக்கை

### தீவகத்திற்கு நியமிக்கப்பட்ட கிராமசேவகர்கள்

(யாழ்ப்பாணம்)

புதிய கிராம சேவகர்கள் தங்களது நியமனங்களை உறுதியாக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

அண்மையில் தீவக பகுதிக்கு புதிய கிராம சேவகர்கள் இருபது பேர் நியமனம் செய்யப்பட்டனர்.

இவர்கள் தீவகத்திற்கு செல்லும் வழியில் ஈ.பி.டி.பி. குழுவினரால் தீவகத்திற்கு செல்ல விடாமல் திருமலையில் வைத்து திருப்பி யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இதைத் தொடர்ந்து இவர்கள் இருபது பேரினதும் நியமனங்கள் கேள்விக்குள்ளாகியுள்ளன.

இதனால் இவர்கள் தங்களது நியமனங்களை உறுதியாக்கி சேவையைத் தொடர உடன் நடவடிக்கை எடுக்குமாறு இருபது கிராம சேவகர்களும் கையொப்பம் இட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

ஈ.பி.டி.பி குழுவினரால் தீவக பகுதியில் கிராம சேவகர்களாக நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருபவர்களை நிரந்தரமாக்குமாறு ஈ.பி.டி.பி அரசாங்கத்தை கோரியுள்ளனர்.

இவர்கள் நிரந்தரமாக்கப்பட்டதன் பின்பே யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்திற்கு கடமையாற்றவர இருக்கும் புதிய கிராமசேவகர்களை தீவகத்திற்குள் அனுமதிக்க முடியும் எனவும் ஈ.பி.டி.பியினர் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ) (பா)

# முத்தமிழ் காவலரின் இழப்பு தமிழுலகத்திற்கு ஈடுசெய்யமுடியாதது

## தமிழ் வளர்ச்சிக் கழகம் இரங்கற் செய்தி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழிக்கோ, இனத்துக்கோ, நாட்டுக்கோ எங்கிருந்து இழுக்கு ஏற்பட்டாலும் அதை எதிர்கொண்டு போராடும் முத்தமிழ் காவலரது இழப்பு தமிழினத்துக்கும் தமிழ் மொழிக்கும், தமிழுலகத்துக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். இவ்வாறு முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் மறைவையிட்டு தமிழ் வளர்ச்சிக் கழகம் விடுத்த இரங்கற் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தி வருமாறு;

தமிழ்மண்ணிலேயே தமிழ் மொழியை அடிமை மொழியாக்கி தமிழகத்தில் கட்டாயமாக இந்திக் கல்வி நுழைக்கப்பட்டதை எதிர்த்துக் களமமைத்துப் போராடிய முத்தமிழ்க்காவலர் அவர்கள் தனது 70 ஆண்டுகளுக்கு மேலாகத் தான்ஆற்றி வந்த மொழி, இன நலன் காக்கும் பணியை இடைநிறுத்தி மீளாத் துயில்கொண்டதானது உலகத் தமிழினத்துக்கே பேரிடியாக அமைந்துவிட்டது.

அன்னைத் தமிழ் மொழிக்கும் இன நலன்களுக்கும்கேடு வந்துறும் பொழுதுகளிலெல்லாம் அவற்றை முன்னின்றெதிர்கொண்டு போராடும் முத்தமிழ்க்காவலரின் 70ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அயராத பணியைத்தமிழன்னை இழந்து விட்டாள்.

எம்மருந் தமிழுக்கு அணியாகத் திகழும் திருக்குறள்பற்றியும் அதனை ஆக்கி எமக்களித்த வள்ளுவன்பற்றியும் பல ஆராய்ச்சி நூல்களைத் தந்ததோடு, தமிழ்மொழியின் சிறப்புப்பற்றியும் மக்களது நல்வாழ்வு ஒழுக்கம் பற்றியும் பல்வேறு நூல்களை ஆக்கி வழங்கியிருக்கிறார்.

தமிழ்மொழிக்கோ, இனத்துக்கோ, நாட்டுக்கோ எங்கிருந்து இழுக்கு ஏற்பட்டாலும் அதை எதிர்கொண்டு போராடும் முத்தமிழ்க்காவலரது இழப்பு தமிழினத்துக்கும் தமிழ்மொழிக்கும் தமிழுலகத்துக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

முத்தமிழ்க் காவலரை இழந்து துயர ஆழியில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தமிழ் மக்களுக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரைப் போற்றி வணங்கிநிற்கிறது.

# அமைச்சர்களின் செயற்பாடு குறித்து ஜனாதிபதி விளக்கம் கோருகிறார்

(கொழும்பு)

அரசின் கொள்கை விளக்கம் தொடர்பாக எதிர்வரும் ஆறாம் திகதி பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவதற்குமுன்பாக அமைச்சர்களின் செயற்பாடு தொடர்பான மதிப்பீடு ஒன்றை ஜனாதிபதி திருமதி சந்திரிகா மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக அமைச்சரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் ஜனாதிபதி திருமதி சந்திரிகா தனித்தனியே சந்தித்து பேச்சு நடத்தி வருவதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஒவ்வொரு அமைச்சரும் தமக்கு கீழ் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் மற்றும் வழங்கப்படவுள்ள கேள்விப்பத்திரங்கள் தொடர்பாக விரிவான அறிக்கை தயாரிக்கும்படி கோரப்பட்டுள்ளதாகவும், கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவதில் எந்தவித ஒழுங்கீனமும் இடம்பெற அனுமதிக்கப்படக்கூடாதென அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

பாராளுமன்றம் அடுத்த ஆறாம் திகதி கூடும்போது ஜனாதிபதி அரசின் கொள்கைகள் தொடர்பாக சம்பிரதாயபூர்வமான வைபவத்தில் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுவது தெரிந்ததே.

# மனிதஉரிமை மீறல் வழக்கு ஐ·தே·கட்சி பா. உ. தாக்கல்

அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யப் போவதாக, ஐ. தே. கட்சி தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார்.

பிறிமா பேக்கரி ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக குற்றப் புலனாய்வு பொலிசாரால் ஐந்தாவது மாடியிலுள்ள அலுவலகத்தில் வைத்து காலை 10. 25 முதல் பிற்பகல் 6. 15 வரை இவர் விசாரிக்கப்பட்டது தெரிந்ததே.

அவர் மேலும் கூறுகையில், ...ந்த போது திருமதி சந்திரிகாவுக்கு ஆதரவு காட்டுவதாக குற்றம் சுமத்தப்பட்டு நான்கு முறை குற்றப் புலனாய்வு பொலிசாரால் விசாரிக்கப்பட்டதையும் சுட்டிக் காட்டினார்.

டாக்டர் ராஜித சேனாரட்ண தலைமை தாங்கும், சுதந்திர தொழிலாளர் சங்கம் பிறிமா பேக்கரியில் செல்வாக்குடன் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## அமர்வுகள்

இதுகுறித்து இக்குழுவிற்கு சுமார் 500 திருத்தங்கள் பல் வேறுபிரிவினராலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத்...

# விறகுவெட்டச் சென்றவரை ராணுவம்பிடித்துச்சென்றது

(யாழ்ப்பாணம்)

பெரியவிளான் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விறகுவெட்டச் சென்ற இளைஞர் ஒருவரை பதுங்கி இருந்த இராணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்றதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

வழமையாகஞாயிறுதோறும் இப்பகுதிக்குச் சென்று விறகு வெட்டிவரும் சிந்தாத்துரை நியூட்டன் (றசீம், வயது 18) என்பவரே இவ்வாறு இராணுவத்தால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டவராவார்.

மேற்படி சம்பவ தினமன்று இவரும் இவருடன் சேர்ந்த மேலும் ஆறு இளைஞர்களும் விறகுவெட்டுவதற்கும் தங்களுடைய வீடுகளைப் பார்ப்பதற்குமாக சென்றபோது பதுங்கி இருந்த இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் பயத்தில் சிதறி ஓடியவர்களில் ஏனையோர் தப்பிவந்துவிட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை இளைஞர் ஒருவரை இராணுவம் கூட்டிச் சென்றதை வயோதிபர் ஒருவர் கண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி இளைஞர் பற்றிய தகவல் பெற்றுத்தருமாறு பெற்றோர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் கேட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (சி)

# படகேற நின்ற பெண்ணிடம் பணம், நகை திருட்டு

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்த பெண்மணியிடமிருந்து பல ஆயிரம் ரூபா...

சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

## இரு கப்பல்களில் பொருள் இறக்கம்

(வடமராட்சி)

பருத்தித் துறை இறங்குதுறையில் இரண்டு கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

'ஹபரண', 'குமண' ஆகிய இரு கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன. (யே ா

## திருத்தம் ஆரம்பம்

(கொழும்பு)

க. பொ. த. சாதாரண தரப்பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும்வேலை நாளை கொழும்பில் ஆரம்பமாகவுள்ளதாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தேசியப்பட்டியல் எம்.பி.கள் இருவரை பதவிவிலக ஐ. தே. க. கோரும்

(கொழும்பு)

தேசியப் பட்டியல் மூலம் ஐ. தே. கவின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் பதவி விலகும்படி கேட்டுக்கொள்ளப்பட இருப்பதாக நம்பகரமாக தெரிய வந்துளளது.

ஐ. தே. க. மேலிடம் இந்த இரு உறுப்பினர்களது செயற்பாடு தொடர்பாக திருப்தியில்லாமல் இருப்பதே இதற்கு காரணமெனக்கூறப்படுகிறது.

இதேவேளை ஏற்கனவே வெற்றிடமாகவுள்ள ஐ. தே. க.வின் இரு பாராளுமன்ற இடங்களும் நிரப்பப்படுவது தொடர்பாகவும், ஐ. தே. க உயர் பீடத்தில் ஆராயப்படுகிறது. தேசியப் பட்டியல் எம். பிக்களான டாக்டர் காமினி விஜேசேகரவும், ஜி. எம். பிரேமச்சந்திராவும் மரணமானதை தொடர்ந்து இவ் வெற்றிடங்கள் ஏற்பட்டமை தெரிந்ததே. இதனிடையில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார் திருமதி ஹேமா முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் காமினி திசாநாயக்காவின் மகன் நவீன் திசாநாக்கய, மக்கள் கட்சித் தலைவர் சரத் கோங்காககே, காலஞ்சென்ற ஒஸி அபயகுணசேகரவின் சகோரர்களான சுரேன் மற்றும் சேனக, தொழிற் சங்கவாதியான சிறிலால் டி. மெல் ஆகியோரது பெயர்கள் இவ் இடங்களுக்கு நியமிக்கப்படுவது தொடர்பாக ஆராயப்படுவதாக தெரிய வருகிறது.

## கவின்கலை கல்லூரி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக தீவகக் கோட்டமகளிர்பிரிவினால்புதிதாக 'கவின்கலைக் கல்லூரி' ஒன்றுஅண்மையில் திறக்கப்பட்டுள்ளது.

மேலைத் தேய கீழைத்தேய வாத்தியக் கருவிகளுடன் வாய்ப்பாட்டு என்பன இக்கல்லூரியில் பயிற்றப்படுவதாக மேற்படி கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

## நிவாரணப்பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தீவக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பாவனையாளர்களுக்குரிய ஒக்ரோபர் மாத முதல் இரண்டு வார நிவாரண உலர் உணவுப் பொருட்கள் நேற்று தொடக்கம் அந்தந்த சங்கங்களின் நிவாரணக் கிளைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (22)

## தெளிவானதொரு

இந்த அரசாங்கம் சமாதான முயற்சிகளை இடைநிறுத்தி விடுமா? என்று. இது முதலாவது.விடுதலைப் புலிகள் தரப்பில் இவ் அரசாங்கம் இராணுவ ரீதியான தீர்வொன்...

# தொழில் பயிலுநர்கள் கடமையாற்ற அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற தேசிய தொழில் பயிலுநர் சபை தொழில் பயிலுநர்கள் தொடர்ந்து யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் கல்வித்திணைக்களத்தில் சுமார் 18 பேர் கடமையாற்றி வருகின்றனர் இவர்களைத்தொடர்ந்து யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்ற அனுமதிப்பதற்கான அனுமதியை மாகாண சபை வழங்கியுள்ளது.

அத்துடன் இவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தேவையான நிதியினை வடக்கு-கிழக்கு மாகாண சபையிடம் இருந்து பெற்று வழங்குமாறு யாழ் கல்வித்திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## நத்தார்

...வும் அமைச்சர் தெரிவித்தார்.

இதே சமயம் நத்தார்-புது வருட தினங்களுக்கு இடையே இரண்டாம் கட்ட பேச்சுக்களை நடத்தமுடியுமா? என பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கு விடையளிக்க முடியாது அமைச்சர்களும் அதிகாரிகளும் காணப்பட்டதாக பி.பி.ஸி சிங்களசேவை தெரிவித்தது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிப்பதற்கு வந்த அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்குமே இந்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக எதுவும் சொல்லமுடியாது என்று கூறிய அவர்கள் சிந்தித்தே இதற்கான முடிவை வெளியிட முடியும் என தயக்கத்துடன் கூறியுள்ளனர்.

தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது இருந்தபோதும் இந்த நிலை மூன்று வாரங்களே நீடித்தது நான் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து சரியாக ஒரு வாரங்களில்மீண்டும் விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சி தொடர்பாக கடிதத் தொடர்புகளைஆரம்பித்தோம்.

## வாளிக்ள் அன்பளிப்பு

நோயாளர் நலன்புரிச் சங்கம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இருபது ஆயிரம் ரூபா பெறுமதியான வாளிகளை அன்பளிப்பு செய்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க அலுவலகத்தில் இவ் வைபவம் நேற்று நடைபெற்றது-

இவ் வைபவத்தில் நோ. ந. பு. சங்கத்தின் சார்பில் சங்கத்தின் செயலாளரும் வர்த்தகப் பிரமுகருமான சுப்பிரமணியம் சோமசுந்தரம், வர்த்தகப் பிரமுகர் சிறீஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டு வாளிகளை வைத்தியசாலை பணிப்பாளரிடம் அன்பளிப்பு செய்தனர். (இ)

## தோல்விக்கு காரணம்

ஐ. தே க ஊழல்களில் சம்பந்தப்பட்ட தலைமைகளை மறைக்க முற்பட்டமையே தேர்தலில் கட்சிதோற்றதற்கு காரணம்என முன்னாள்அமைச்சர் ரூபாகருணாதிலக தெரிவித்தார்.

## இன மொழி

...யிலும் செந்நெறியில் ஒழுகிய தமிழகத் தலைவர்,

விசாரிக்கப்பட்டது தெரிந்ததே.

அவர் மேலும் கூறுகையில், பிரேமதாசா பதவியில் இரு

சுமார் 500 திருத்தங்கள் பல்வேறுபிரிவினராலும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நீங்காத நினைவுகளில்
## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## மயிலு நாகராசா (வன்னி)

மலர்வு: 1948-02-19 | உதிர்வு: 1993-01-13

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை நல்வழிப் படுத்திய எமது அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி!

| | | |
|---|---|---|
| மகாத்மா வீதி, | மனைவி; | அசுவதம் |
| அல்வாய் வடக்கு, | மகள்: | சிந்துஜா |
| அல்வாய். | தாய்: | பிள்ளையம்மா |
| (சி-10974) | உற்றார், உறவினர், நண்பர்கள் | |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31, ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வந்த பெண்மணியிடமிருந்து பல ஆயிரம் ரூபா பணம்,நகைகள என்பன திருடர்களால் அபகரிக்கப்பட்டன.

## திட்டமிடல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலக ரீதியான வரும் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டத்துக்கான திட்டமிடல் தொடர்பான ஆலோசனைக்கான கலந்துரையாடல் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டப் பணிப்பாளர்கள், சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்களின் (சனசமூக நிலையங்கள்) தலைவர், செயலாளர் மற்றும் தமிழீழ ஊரக மேம்பாட்டு பங்கேற்பவைகள் (கிராம அபிவிருத்தி சங்கம்) ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பவைகள் (மாதர் கிராம அபிவிருத்தி சங்கம்) ஆகியவற்றின் தலைவர், செயலாளர்கள் ஆகியோர்குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகமளித்து ஆலோசனைகளை தந்துதவும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். இன்றுகாலை பத்து மணியளவில் நாவலர் மண்டபத்தில் யாழ், பிரதேச செயலகப் பிரிவுக்கும், பிற்பகல் இரண்டு மணியளவில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கும் இக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

நாளை காலை பத்துமணியளவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்கும், பிற்பகல் இரண்டு மணியளவில் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக்கும் இக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

புங்குடுதீவு ஸ்ரீசுப்ரமணிய மகளிர் மகாவித்தியாலய ஆசிரியையான திருமதி அம்புஜம்சண்முகநாதன் என்ற பிரஸ்தாப பெண்மணி கொழும்பிலிருந்து வந்து ஆலங்கேணி துறையில் படகேறுவதற்காக தரித்து நின்றபோது, திருடர்கள்லாவகமாகஅவரது பையில்இருந்து சுமார் ஏழு தங்கபவுண் நகையுடன் பதினேழாயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் சூறையாடிச் சென்று விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரவையும்,சனநெரிசலையும்சாதகமாக்கியே திருடர்கள் தமதுகை வரிசையைக் காட்டியதாக சம்பந்தப்பட்ட பெண்மணி தெரிவித்துள்ளார்.

## புலிகளின்

பட்டு அவசர சிகிச்சைக் குட்படுத்தப்பட்டுள்ளனர். காணாமல்போன பொலிசாரை தேடும் பணியில் பொலிசார் உடனடியாக ஈடுபட்டனர் என அரசதரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கானமீன்மடு கிராமத்திலிருந்து சத்துருக் கொண்டான் வழியாக கால் நடையாக ரோந்து சென்ற பொலிசார் மீது ரயில்பாதை ஓரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இத் தாக்குதல் குறித்த மேலதிக சேதவிபரங்கள் உடனடியாக தெரிய வரவில்லை.

## வடபகுதி

கைப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன விசேட இராணுவப் பயிற்சியைப் பெறுவதற்காக லண்டன் பயணமாவதைத் தொடர்ந்து இம் மாற்றம் ஏற்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக அது மேலும் கூறியது.

வது. விடுதலைப் புலிகள் தரப்பில் இவ் அரசாங்கம் இராணுவ ரீதியான தீர்வொன்றையே விரும்புவதாகவும் படையினரின் கட்டளைகளுக்கு பணிந்து சமாதான முயற்சிகள் திசைதிருப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது உண்மை நிலை என்ன?

பதில்: எமது அரசாங்கத்தைப் பொறுத்தவரை இது முழுமையாக உண்மைக்கு மாறான தகவல் என்றே கூறுவேன். நாம் எந்த நாளும் சமாதானம் தொடர்பாகவே பேசினோம். நீங்கள் கூறியது போன்றுசமாதானத்தைஇந்த நாட்டில் ஏற்படுத்த ஆறு, ஏழு மாதங்களில் மூன்று முறை எமக்கு மக்கள் அங்கீகாரம் வழங்கினர். ஏனைய விடயங்கள் உட்பட மக்கள் எம்மை அங்கீகரித்ததாகவே கருதுகிறேன்.

இந்த சமாதான முயற்சியை நாம் பதவிக்கு வந்த ஒரு வாரம் செல்ல முன்னர் நாம் மேற்கொண்டோம். பெரிய அளவில் இடையூறுகள், இன்னல்கள் மத்தியில் இம்முயற்சியை நாம் ஆரம்பித்தோம். இச் சமாதான முயற்சியை தேர்தலை எதிர்நோக்கி இருந்தபோதும் நாம் மேற்கொண்டோம்.

சாதாரணமாக எந்த அரசாங்கமும் இது போன்ற ஓர் பயங்கரமான பிரச்சினையை, அரசியலைதிருப்பக்கூடிய பிரச்சினையை தேர்தல் காலங்களில் முன்னெடுக்க மாட்டார்கள் ஆனால் நான் அதனைச் சவாலாக எடுத்து முயற்சி மேற்கொண்டேன்.

இருந்தபோதும் இச் சமாதான முயற்சி தொடர்பாக நாம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம் என கூறுவதாயின் நாம் தேர்தல் காலங்களிலும் எமது கட்சி வேட்பாளர்களுக்கு எமக்கு பிரச்சினை ஏற்படும் என்ற நிலையிலும் அதனை மேற்கொண்டோம்.

இருந்தபோதும் கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து எமக்கு அதனை

தான முயற்சி தொடர்பாக கடிதத் தொடர்புகளைஆரம்பித்தோம்.

இம் மாதம் வரை மட்டும் ஆறு, ஏழு கடிதப் பரிமாற்றம் இருதரப்பிலும் இடம் பெற்றது நாம் விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்தோம் தாக்குதல் நிறுத்தம் அதாவது குறைந்த அளவில் தற்காலிக தாக்குதல் நிறுத்தம் சில வாரங்கள் அமுல் படுத்துவோம் என்று. ஆரம்பத்தில் இருவாரங்களுக்கு மேற்கொள்வோம் என்று பலபல பேச்சுவார்த்தைகளின் பின்னர் அவர்கள் இதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

நாம் அவர்களுக்கு தெளிவாகத் தெரிவித்தோம். இத் தாக்குதல் நிறுத்தம் வெறுமனே ஒரு தாக்குதல்நிறுத்தம் மட்டுமல்ல எமது மக்களும் வடக்கு - கிழக்கு மக்களும் எதிர்பார்க்கும் சமாதான அரசியல் தீர்வொன்றுக்கு வரக்கூடிய முதலாவது கட்டமாக அது அமைய வேண்டும் என்று. அப்போது மட்டுமே நாம் தாக்குதல் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று.

தாக்குதல் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை நாம் தெளிவாக தெரிவித்தோம். இக் கருத்துக்களுக்கு விடுதலைப் புலிகள் தாக்குதல் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

சமாதான பேச்சுக்கள் குறித்தும் ஏற்றுக்கொண்ட மாதிரியான அறிக்கைஒன்றை விடுத்துள்ளார்கள். இத்தகவல் உறுதியானது அல்ல.

கேள்வி: இந்த அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை எதிர்காலத்தில் முன் கொண்டு செல்லும் என்றா கூறுகின்றீர்கள்?

பதில்: ஆம். தெளிவான ஒரு நிலையில் நாம் சமாதானப் பேச்சுக்களை கொண்டு செல்வோம் எனவும் தெரிவித்தார்.

## இன மொழி

யிலும் செந்நெறியில் ஒழுகிய தமிழகத் தலைவர்,

தமிழகத் தலைவர்கள் பலர் தடுமாறிய, தடுக்கிவிழுந்த நேரங்களிலெல்லாம், இனநலனுக்கெதிராகச் செயற்பட்ட நேரங்களிலெல்லாம் தயக்கமின்றிக் தட்டிக் கேட்டவர் அவர்,

தமிழகத்துக்கு வெளியேயும் உலகத் தமிழினத்துக்காக குறிப்பாக ஈழத் தமிழர்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர் அவர். ஈழத்தமிழர்பால் பேரன்பு கொண்ட மூதறிஞர் கி. ஆ. பெ. ஒன்பது தடவைகள் தமிழீழத்துக்கு வருகை தந்தவர். தமிழகத் தலைவர்கள் பலர் தன்னலந்தலைக்கேறி ஈழத்தமிழர்கள் நலன்களைப் புறம்தள்ளி ஒதுக்கியும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இழிவுபடுத்தி எதிர்த்தும் வந்த நிலையிலும் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று உழைத்த பெருந்தகை.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்பதிலும், ஈழத்தமிழினம் விடுதலை பெறவேண்டுமென்பதிலும் பேரார்வம் கொண்டிருந்த முத்தமிழ்க் காவலரவர்கள் எமது விடுதலைப் போராட்டத்துக்கு வீறு சேர்க்கின்ற வகையில் உலக நாடுகள் பலவற்றுக்குச் சென்று சொற்பெருக்காற்றியவர். வாணாளிலேயே தமிழீழம் விடுதலை பெற வேண்டும்' தமிழர்கள் தன்னாட்சி பெற்று வாழ்வதைக் காணவேண்டுமென்றபேரவா கொண்டவர். எமது தலைவரின் அருமைபெருமைகளை உலகமக்களுக்குப் பறைசாற்றியவர்,

அன்னாரை இழந்து துயருறும் தமிழ் கூறு நல்லுலகத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகளும் தங்கள் துயரைப் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாருக்கு இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.